## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SIRKALI

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

**Case No.DVC.3/2023**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | சாந்தி | Prosecution | RW-1 |
| Father Name | ரிஷிகேஷி | Defence | |
| Village | கும்பகோணம் | Taluk | கும்பகோணம் |
| District | Tanjoure | Age | 64/2025 |

Solemnly affirmed by Tmt.R. Geetha, Grade 3 bench clerk of this Court in accordance with the provisions of Act X of 1873 of the day

**09.02.2026**

**சத்தியபிரமாணம் பெறப்பட்டது.**

**மனுதாரர்ர தரப்பு குறுக்கு விசாரணை**

எனது அப்பா இருமுறை எம்பி ஆகவும் ஒரு முறை எம்எல்ஏ ஆகவும் இருந்துள்ளார் என்றால் சரிதான். நான் என்ன பணி செய்தேன் என்றால் நான் விருப்ப ஓய்வு பெற்ற போது இணை ஆணையர் நகராட்சி நிர்வாக இயக்குநரகம் சென்னையில் பணியாற்றினேன். தற்போது பணி ஓய்வு பெற்றேன். என் கணவரும் டாக்டர் என்றால் சரிதான். எனது சகோதரி மாதவி தலைமை ஆசியரியர் மற்றும் அவரது கணவரும் தலைமை ஆசிரியர் என்றாலும் சரிதான். தென்பாதி யில் உள்ள வீட்டின் மின்சார கட்டணத்தை மனுதாரர் தான் செலுத்தி வருகிறார் என்றால் தவறு. ஆன்லைன் மூலமாக நாங்கள் தான்செலுத்திவருகிறோம். நான் பொய் என்றால் சரியல்ல.

எனது தம்பி குலோ'த்துங்கள் லதா தம்பதிக்கு குழந்தை பேறு இல்லை என்றால் சரிதான். அதற்காக அவர்கள் இருவரும் ஒரு குழந்தையை தத்து எடுப்பதற்காக என்னிடம் கேட்டார்கள் என்றாலும் நான் அது குடும்பத்திற்கு அவமாணம் என்று சொல்லி மறுத்துவிட்டேன் என்றாலும் சரியல்ல. எனது தம்பி இறப்பிற்கு பிறகு எனது சகோதரி கண்ணகிக்கு 20.11.2020 ந்தேதி சீரா பாலிகிளினிக் மருத்துவமனையில் பொய்யான ஆவணங்களின் பேரில் குழந்தை பெற்றதாக ஆவணம் தயார் செய்யப்பட்டது என்றால் அது பற்றி இந்த வழக்கில் என்னால் கூற முடியாது. அந்த பிறப்பு பதிவு சான்றுக்கு எனது

செல்வாக்கு பயன்படுத்தப்பட்டுள்ளது என்றால் தவறு. எனது தங்கை கண்ணகியின் கணவர் ராஜா என்பவர் திருமணம் ஆகி கொஞ்சம் நாளிலேயே வெளிநாடு சென்று விட்டார் அதன் பிறகு வரவில்லை என்றால் தவறு வந்தார். அதன் பிறகு எனது தங்கையும் வெளிநாடு சென்றார். என் தம்பி மற்றும் தாயார் இறந்த பிறகு அவர்கள் இருவரும் வெளிநாட்டில் இருந்து இங்கு வந்துவிட்டார்கள். எனது அம்மா சாரதாம்பாள் பெயரில் உள்ள கும்பகோணம் மருத்துவமனையில் லதா ஒர்கிங் பார்ட்னராக இருந்தாரா என்றால் இல்லை. மேலும் அந்த மருத்துவமனையின் மருத்துவருடைய தாயார் பெயர் சாரதா என்பதால் தான் அந்த மருத்துவமனைக்கு அப்பெயர் சூட்டப்பட்டது.

மனுதாரர் அதில் ஒர்கிங் பார்ட்னர் இருந்தார் என்றாலும் எந்த காரணமும் இன்றி நாங்கள் அவரை நீக்கியுள்ளோம் என்றாலும் சரியல்ல. எனது தம்பி குலோத்துங்கனுக்கு தீராத வியாதியை மறைத்தும், அவரது வயதையும் மறைத்தும் லதா என்பவருக்கு திரு'மணம் செய்து வைத்துவிட்டோம் என்றால் தவறு. அவருக்கு இருந்தது எதேச்சையாக வந்த நிமோணியா காச்சல் தான். நாங்கள் எந்த உண்மையையும் லதா குடும்பத்தினரிடம் மறைக்கவில்லை. அவருக்கு தீராத நோய் எதுவும் கிடையாது. எனது தம்பி குலோத்துங்கள் எனது சகோதரி மாதவி என்பவர் வீட்டில் இருந்த போது தான் உடல்நலம் குன்றி மருத்துவமனையில் சேர்ந்து இறந்து போனார் என்றால் தவறு. சீர்காழி வீட்டில் இருந்த போது அவருக்கு ஜீரம் ஆரமித்து 10 நாட்கள் மருத்துவரிடம் காண்பித்தும் பலனலிக்காததால் மேல் சிகிச்சைக்காக கும்பகோணம் அன்பு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம்.

நான் எனது எதிருரையில் சீர்காழியில் இருக்கும் போதே என் தம்பிக்கு உடல் நலம் குன்றிவிட்டது என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. என் தம்பி சீர்காழியில் சிகிச்சை எடுத்துக்கொண்டதற்கு நிறைய சாட்சிகள் உள்ளனர். சகோதரி கண்ணகி பாகப்பிரிவினை வழக்கு தொடர்ந்துள்ளார் என்றாலும் அதில் என் தாயார் பெயரில் உள்ள கிருஷ்ணாபுரத்தில் அமைந்துள்ள சொத்தை சேர்க்கவில்லை என்றால் சரிதான். அந்த சொத்து உண்மையில் என் கணவரின் சொத்து ஆகும்.

தென்பாதி வீட்டில் நூலகம் செயல்பட நான் அனுமதித்துள்ள நிலையில் அனுமதிக்கப்பட்ட நேரத்திற்கு கூடுதலாக அங்கு மாணவர்கள் பயன்பாடு அமைந்துள்ளதால் மனுதாரருக்கு அதனால் இடைஞ்சல் ஏற்படுகிறது என்றால் சரியல்ல. எனது தம்பி உயிருடன் இருந்த போது 24 மணிநேரமும் அந்த நூலகம் செயல்பட்டது. எனது அப்பா பெயரில் உள்ள டிரஸ்டில் எனது தம்பி நிறுவன தலைவர் என்றால் சரிதான். அதில் எனது சகோதரிகள் உறுப்பினர்கள் என்றால் சரிதான். எனது தம்பி குலோத்துங்கள் இறப்பிற்கு பிறகு அவர் மனைவி லதா என்பவரை தலைவராக சேர்ப்பதற்கு லதாவை சேர்ப்பது சம்பந்தமாக லதாவிடம் கேட்கவில்லை என்றால் லதா அந்த போர்டில் இல்லை என்பதால் நாங்கள் அனைவரும் சேர்ந்து புதிய தலைவரை தேர்ந்தெடுத்தோம்.

மனுதாரர் லதாவிற்கு தாய், தந்தை கிடையாது என்றால் சரிதான். எனது தாய் தந்தை இறந்து விட்டார்கள் என்றாலும் சரிதான். நான் அவ்வபோது சீர்காழி வரும் போது லதா என்பவரிடம தகறாறு செய்து சண்டை போட்டேன் என்றால் சரியல்ல. நான் சீர்காழி வருவதாக இருந்தால் எனது சித்தப்பா மகன் பொற்செழியன் வீட்டில் இருந்து செல்வேன். மாணவர்களை மட்டும் வராண்டா அழைத்து அவர்களிடம் பேசிவிட்டு செல்வேன். வீட்டின் உள்ளே செல்லவில்லை என்பதால் லதா இருக்கிறாரா என்பது பற்றி கூட எனக்கு தெரியாது. என்னுடைய தூண்டுதலின் பேரில் எனது தகப்பனார் கட்சியினை சேர்ந்தவர்கள் லதாவின் தென்பாதி வீட்டிற்கு சென்று தகறாறு செய்து அவர் அங்கு இருக்க கூடாது என்று மிரட்டினார்கள் என்றால் சரியல்ல. என்னை சேர்ந்தவர்கள் யாரும் அவ்வாறு தகறாறு செய்யவில்லை. மேலும் திருமதி.லதா அவர்கள் வீட்டில் மாணவர்களுடைய போக்குவரத்தை பார்ப்பதற்காக பொறுத்தப்பட்டிருக்கும் கேமராரை இரண்டு முறை அடித்து உடைத்து எங்களுக்கு பெருத்து நஷ்டம் ஏற்படுத்தியிருக்கிறார்கள். நாங்கள் காவல் நி லையத்தில் புகார் அளித்திருக்கிறோம். மாணவர்கள் படிக்கும் போது பெந்தகோஷ்த் சபையை சேர்ந்த 15 மற்றும் 20 பேர்கள் சேர்ந்து சத்தமாக ஜெபம் செய்து மாணவர்களின் படிப்பை கெடுக்கும் நோக்கத்துடன் இரண்டு முறை தொலைபேசியில் புகார் தெரிவித்தார்கள். தற்போது நூலகம் இருக்கும் இடம் தவிர மற்ற இடம் லதா அவர்களின் கட்டுப்பாட்டில் உள்ளது. எங்கள்

சம்பந்தபட்டவர்கள் யாரும் அங்கு செல்லவில்லை.

வீட்டில் உள்ள கேமராவை லதா உடைத்தாக வழக்கிற்காக நான் பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. மேலும் மேற்படி சம்பவம் காரணமாக லதா வருமாணம் இன்றி வாழ்கிறார் என்றால் சரியல்ல. நான் எனது நிரூபண வாக்குமூலத்தில் மனுதாரருக்கு எதிராக அபாண்டமாக, உண்மைக்கு புறம்பாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மேலும் எனது சாட்சியம் ஏற்கதக்கது அல்ல என்றாலும் சரியல்ல. தென்பாதி வீட்டின் மாடி போர்சன் வாடகையை நாங்கள் தான் வாங்கிக்கொள்கிறோம் என்றால் சரிதான். அதனை நூலக செலவிற்காக பயன்படுத்துகிறோம். நான் மற்றும் எனது சகோதரிகள் அரசுதுறையில் வேலை பார்த்து நல்ல நிலையில் ஓய்வு பெற்று பண வசதியோடு வாழந்து வருகிறோம் என்றால் நான் மட்டும் தான் அரசு பணியில் இருந்தேன். எனது மற்றொரு சகோதரி அரசு பணியில் இருந்து ஓய்வு பெற்றாலும் அவருக்கு ஓய்வூதியம் இல்லை. கண்ணகி அவர்களின் கணவரின் சம்பதியத்தில் அவர்களிடமிருந்து பெரிய அளவில் பொருளாதார பலம் எதுவும் இல்லை. என் அப்பாவிடம் சொத்து மட்டும் தான் எனது இரண்டு சகோதரிகளுக்கும் அத்தியாவசியமானது எனவே சட்டத்திற்கு உட்பட்டு இந்த வழக்கை தள்ளுபடி செய்ய கேட்டுக்கொள்கிறேன்.

**குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்பட்டது.**

**மறுவிசாரணை இல்லை.**